சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 50/2024

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. மகாராஜ் த/பெ. உடையார் | நாள்.20.02.2025 |
| வயது. 40 | வட்டம் |
| கிராமம். கருநகுழி | மாவட்டம். |

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் வழக்கில் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணி புரிந்து வருகிறேன். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 20.12.2012 தேதியில் பிரதிவாதிகள் வங்கிக்கு அளித்த கடன் விண்ணப்பம் வா.த.சா.ஆ.1. 26.12.2012 தேதியில் பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதிக் கொடுத்த முன் மொழிவு படிவம் வா.த.சா.ஆ.2. 30.1.2013 தேதியில் வங்கியால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம் வா.த.சா.ஆ.3. 6.2.2013 தேதியில் பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதிக் கொடுத்த கல்விக் கடன் ஒப்பந்த ஆவண அசல் வா.த.சா.ஆ.4. 6.2.2013 தேதியில் பிரதிவாதிகள் எங்கள் வஙகிக்கு எழுதிக் கொடுத்த ஏற்பாட்டுக் கடிதம் வா.த.சா.ஆ.5. பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு 24.11.2015, 18.7.2018, 4.2.2021, 5.1.2023 ஆகிய தேதிகளில் எழுதிக் கொடுத்த உயிர்ப்புக் கடிதங்கள் முறையே வா.த.சா.ஆ.6 முதல் 9. பிரதிவாதிகள் எங்கள் வங்கியில் வைத்துள்ள கணக்கு வழக்கு பட்டியல் வா.த.சா.ஆ.10. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை, தோன்றாத் தரப்பினர்